www.nunnarivu.com

# நீதியின் நுண்ணறிவு

NEETHIYIN NUNNARIVU

புலனாய்வு இதழ்

| Volume : 6 | Issue : 3 | Tamil Monthly | December 2025 | Price : Rs. 15/- |
|---|---|---|---|---|
| மலர் : 6 | இதழ் : 3 | தமிழ் மாத இதழ் | டிசம்பர் 2025 | விலை : ரூ. 15/- |




## மும்முனைப் போட்டி

## 2026 சட்டமன்றத் தேர்தல்... யாருக்கு சாதகம்..?





## கோவையில் 13 வீடுகளில் அடுத்தடுத்து கைவரிசை

3 வடமாநில கொள்ளையர்கள் சுட்டுப்பிடித்த போலீசார்...



## பேராவூரணி தொகுதியில் வலுவிழக்கும் திமுக..!

மக்களின் ஐந்து ஆண்டு கோரிக்கை.. நிறைவேற்றித் தராத எம்.எல்.ஏ அசோக்குமார்


SS AQUA
TECHNOLOGIES
SWIMMING POOL, JACUZZI & STEAM,
FOUNTAINS, LANDSCAPING & IRRIGATION
The pool gives good vibes
+ 91 96264 34377
www.ssaquatechnologies.com


SODEX
Liquid Laundry Detergent
SODEX
Floor Cleaner
SODEX
Toilet Cleaner
SODEX
DISHWASH LIQUID
SODEX
Fabric Softener
SODEX
Clean & Care.
Manufactured & Marketed By:
ECOGUARD LABS
Plot # 14, Rojambal Nagar Kanna puram, Mugaglivakkam Chennai 600125
Contact: 95000 76229 / 95000 76411
பொருளோ தரம்
வீட்டிற்க்கோ சுகாதாரம்!!

www.nunnarivu.com
நீதியின் நுண்ணறிவு
NEETHIYIN NUNNARIVU புலனாய்வு இதழ்

ஆசிரியர் வெளியீட்டாளர்
**R.சிவகுமார்**

இணை ஆசிரியர்கள்
J.கணேசபாண்டி, A.விஜய், G.ஜெயபிரகாஷ்நாராயணன்

துணை ஆசிரியர்கள்
D.சிவராஜ், K.பாரதிராஜா, G.சுரேந்திரன், B.காந்திநாதன், S.ராஜ்நாராயணன்

கௌரவ ஆலோசகர்கள்
A.கந்தசாமி S.P.
காவல்துறை கண்காணிப்பாளர் (ஓய்வு)
சுபாஷ் சந்திரபோஸ்
காவல் துணை கண்காணிப்பாளர் (ஓய்வு)
Dr.K.முருகேசன் M.B.B.S., D.L.O.,
மா.செல்வராஜ்
(முன்னாள் முதல்வர் - குருநானக்கல்லூரி)
(மாநில தகவல் ஆணையர்)
சோம்புராஜன்
கூடுதல்ஆணையர், தொழிலாளர்துறை (ஓய்வு)
டாக்டர். மணிவண்ணன் B.S.M.S.
S.வீரப்பன்

முதன்மை நிருபர்கள்
M.சுப்பிரமணியன், R.சதீஷ்குமார், V.மாதவன், A.ராஜ்மோகன்

நிருபர்கள்
R.இன்பசேகரன், G.மோகன், S.சாம்எட்வின், C.சரவணன், S.சீனிவாசன், S.சஞ்சய்குமார், இம்ரான்கான், A.மதிமாறன், J.ஜெஸ்டின்டேவிஸ், மு.ஐசக், தங்கபாண்டியன்

சட்ட ஆலோசகர்கள்
K.M.S.செந்தில்குமார் BSc., B.L.,
M.சரவணன் M.Sc., B.L.,
R.வீரராகவன் B.Sc., M.A., M.B.M., LL.B.,
வடிவமைப்பு : 4 மீடியா டிசைன்ஸ்

நிர்வாக அலுவலகம்:
எண். 14/88, வெங்கடேஸ்வரா நகர், 3வது மெயின்ரோடு, வேளச்சேரி, சென்னை- 42.
போன் : **9884949445, 99624 56555**
**nunnarivuidhal@gmail.com**
**www.nunnarivu.com**

Allrights reserved legal jurisdiction in chennai city court only. Nothing in NEETHIYIN NUNNARIVU is intended to defame any person. But expressed in good faith pursuit of truth and public good.

பீகார் மாநிலத்தில் முதன்முதலாக எஸ்ஐஆர் எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தில் சுமார் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டது பெரும் சர்ச்சையை கிளப்பியது. இடமாற்றம், இறப்பு, பெயர் குழப்பம், வாக்குச்சாவடி மாற்றம் உள்ளிட்ட பல காரணங்களை கூறி பலர் நீக்கப்படுகின்றனர். சொந்த வீட்டில் இருக்கும் ஒருவரே இந்த முறையில் பிரச்னையில்லாமல் பட்டியலில் இடம் பெறுகிறார். மற்றபடி, அடிக்கடி வாடகை வீடு மாறுபவர்கள் உள்ளிட்ட பலர் பிரச்னைகளை சந்திக்கின்றனர். இரண்டாம் கட்டமாக தமிழகம் உட்பட 12 மாநிலங்களில் எஸ்ஐஆர் பணிகள் துவங்கி நடந்து வருகின்றன. இதற்கு திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

தமிழகத்தில் நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் பருவமழை மற்றும் பனிப்பொழிவு தீவிரமாக இருக்கும். இந்த சூழலில் எஸ்ஐஆர் பணிகளை மேற்கொண்டால், தேவையற்ற பனிச்சுமை என்பதோடு, பணிகளும் பாதிக்கும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. தற்போது தமிழகத்தில் டிட்வா புயல் தாக்கத்தால் பல மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. மழை குறைவான மதுரை மாவட்டத்தில் கூட மழை பரவலாக பெய்து வருகிறது.

டெல்டா, நெல்லை மாவட்டங்களில் கொட்டி தீர்த்த மழையால், பல லட்சம் ஏக்கர் நெற்பயிர்கள் மூழ்கி நாசமடைந்தன. மேலும், எஸ்ஐஆர் பணிகளை முடிப்பதற்கான கால அவகாசம் மிகக்குறைவு என்பதால், இப்பணிகளை மேற்கொள்ளும் அலுவலர்கள் கடும் மன உளைச்சலில் சிக்கி தவித்தனர். குறிப்பாக, பிஎல்ஓ பணியில் ஈடுபடுவர்கள் பலருக்கு, வாக்காளர்கள் பலர் போனில் தொடர்பு கொண்டு பல சந்தேகங்களை கேட்பது, பலர் அவர்களிடம் சென்று வாக்குவாதம் செய்வது போன்ற பிரச்னைகளும் எழுந்தன.

இதனால் பணிகளில் தொய்வு ஏற்பட்டதோடு, பலர் தற்கொலை முயற்சியில் ஈடுபடும் சம்பவங்களும் நடந்தன. இதுவரை 14 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். (டிச.4) விண்ணப்ப படிவங்களை ஒப்படைப்பதற்கான கால அவகாசம் முடிவதாக இருந்தது. தற்போது இது டிச.11 வரை ஒப்படைப்பதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், எஸ்ஐஆர் பணிகளை மேற்கொள்பவர்களுக்கும், வாக்காளர்களுக்கும் தேவையற்ற நெருக்கடி ஏற்படுவதை ஒன்றிய அரசு உணர வேண்டும். தேர்தல் ஆணையமும் இதுதொடர்பான குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்பதும் மக்களின் எண்ணமாகும்.



**- ஆர்.சிவகுமார்,**
**ஆசிரியர்**



# டிட்வா சூறாவளி தாக்கம்

## டெல்டா விவசாயத்தை ஏரிகளாக மாற்றிய வெள்ளம்

### பட்டுக்கோட்டை–மதுக்கூர் பகுதிகளில் பெரும் சேதம்

டிட்வா சூறாவளியின் பின்னர் தொடர்ந்த கனமழை டெல்டா பகுதிகளில் மிகப்பெரிய அழிவை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை மற்றும் மதுக்கூர் சுற்றுவட்டாரங்களில் கடந்த சில ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு பயிர்கள் சேதம் பதிவாகியுள்ளது. வயல்கள் அனைத்தும் நீரில் மூழ்கி, ஒரு வாரத்திற்கு முன்பு பசுமையாக இருந்த விவசாய நிலப்பரப்பு இன்று பரந்த ஏரிகளைப் போல காட்சி தருகின்றன.

பட்டுக்கோட்டை வட்டாரத்தில் உள்ள நடுவிக்கோட்டை, செம்பாலூர், சென்டான்காடு, சூரப்பள்ளம் போன்ற கிராமங்களில் 5,700 ஹெக்டேர் வேளாண் நிலங்கள் பாதிப்படைந்துள்ளன. இதில் சுமார் 75 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட சாம்பா–தாலடி நெற்பயிர்கள் முழுமையாக அழிந்த நிலையில் உள்ளன. பல நாட்களாக நீர் இறங்காததால், இப்பயிர்கள் எந்தவித பயனுக்கும் பயன்படுத்த முடியாத அளவுக்கு





சிதைந்துவிட்டதாக விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர். தானியத் தொகுப்புகள் கரைந்து, நாற்றுப்புதர்கள் விரிந்தோட, பலர் தங்கள் ஆண்டுதோறும் கிடைக்கும் நம்பிக்கையையே இழந்துள்ளனர்.

மதுக்கூர் சுற்றுவட்டத்தில் நிலை மேலும் கவலைக்குரியதாக உள்ளது. இங்கு உள்ள 4,171 ஹெக்டேர் நிலங்களில் சுமார் 1,200 ஹெக்டேர் பயிர்கள் முழுமையாக சேதமடைந்துவிட்டன. கடற்கரை அருகாமையில் அமைந்துள்ள இந்த belt தொடர்பான பகுதிகளில், இன்னும் நீர் சேர்க்கை அதிகரித்தால் மேலும் நாசம் ஏற்படலாம் என்ற அச்சம் நிலவுகிறது. வயல்கள் நீர்நிலையாக காட்சியளிப்பதால், இயல்புநிலை திரும்ப பல வாரங்கள் ஆகும் என அதிகாரிகள் மதிப்பிடுகின்றனர்.

சேத மதிப்பீட்டுப் பணிகளில் வட்டாட்சியர் தர்மேந்திரா, மண்டல துணை வட்டாட்சியர் உமர், உதவி இயக்குநர்கள் அப்சரா மற்றும் திலகவதி ஆகியோர் தன்னலமின்றி ஈடுபட்டு வருகின்றனர். SIR பணி சுமையிருந்து பம்பரம் போல் சுற்றி வருகிறார் வட்டாட்சியர் தர்மேந்திரா. நீர் நிறைந்த பண்ணை வழித்தடங்கள், அணுக முடியாத நிலப்பரப்புகள் உள்ளிட்ட பல சவால்களை எதிர்கொள்ளும் நிலையிலும், அவர்கள் நேரடி ஆய்வுகளை மேற்கொண்டு விவசாயிகளின் பிரச்சினைகளை தொடர்ந்து அரசு கவனத்திற்கு கொண்டு சென்று வருகின்றனர்.

விவசாயிகள் வலியுறுத்தும் முக்கிய கோரிக்கை, 33% சேதத்திற்கு மேல் ஏற்பட்டவர்களுக்கு மட்டும் அல்லாமல், குறைவாக சேதம் அடைந்தவர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என்பதே. “இழப்பு என்பது எவ்வளவு இருந்தாலும் அது இழப்பே; குறைந்தபட்சம் அடிப்படை நிவாரணத் தொகை எல்லா பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் வழங்கப்பட வேண்டும்” என்று அவர்கள் வேண்டுகின்றனர்.

பெரும் இடரின் நடுவே நம்பிக்கையைத் தாங்கி நிற்கும் இந்த டெல்டா மக்கள், அரசு உரிய நடவடிக்கை எடுத்து விரைவான நிவாரணம் வழங்கும் என எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.







**தென் சென்னை பெருங்குடி அன்புச்சோலை பகல் நேர முதியோர் பராமரிப்பு மையத்தில் நவம்பர் 25, 2025 அன்று துரைப்பாக்கம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. அண்ணாதுரை மற்றும் காவலர் திரு. சிலம்பரசன் அவர்களும் முதியோர் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். முதியோர்கள் சந்தேகங்கள் கேட்டு நிவர்த்தி செய்துகொண்டனர்.**

# புதுக்கோட்டை, பிசானத்தூர் கிராம மக்களுக்கு கிடைத்த

# மாபெரும் வாழ்வாதார வரலாற்று வெற்றி!

## துரை வைகோ எம்.பி பெருமிதம்!



புதுக்கோட்டை, பிசானத்தூர் கிராம மக்களுக்கு கிடைத்த மாபெரும் வாழ்வாதார வரலாற்று வெற்றி என மதிமுகவின் முதன்மைச் செயலாளர் துரை வைகோ எம்.பி. தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில் “எனது திருச்சி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தில், கந்தர்வகோட்டை பகுதியில் உள்ள பிசானத்தூர் ஊராட்சியில், பிசானத்தூர் கிராமத்தில், அருகில் உள்ள எட்டு மாவட்டங்களிலிருந்து சேகரிக்கப்படும் மருத்துவக் கழிவுகளை ஒரே இடத்தில் பாதுகாப்பாக அழிப்பதற்காக, உயிரி மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு ஆலை (Bio—Medical Waste Unit) தனியாரால் அமைக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இந்த மருத்துவக் கழிவு எரியூட்டும் ஆலையை பிசானத்தூர் கிராமத்திலிருந்து மாற்றி, மக்கள் வசிக்காத, விவசாய நிலங்கள் இல்லாத, நீர்நிலைகளுக்கு அருகில் இல்லாத, நீராதாரங்கள் பாதிக்கப்படாத, மக்கள் பயன்பாடு அற்ற தரிசு நிலங்களைத் தேர்வுசெய்து, அந்த இடத்திற்கு மாற்றம் செய்ய வேண்டும் என்று இப்பகுதி மக்கள், குறிப்பாகப் பெண்கள், விவசாயிகள், இளைஞர்கள், கடந்த ஒரு மாதகாலமாக அறவழியில், கட்சி பாகுபாடின்றி, காத்திருப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனை அறிந்து, அவர்களின் போராட்ட இடத்திற்கு கடந்த 22.11.2025 அன்று நேரில் சென்று, மக்களைச் சந்தித்து எனது ஆதரவைத் தெரிவித்துக்கொண்டேன். அப்போது நான் பேசுகையில், இந்தப் பிரச்சனை மக்களின் வாழ்வாதாரப் பிரச்சனை. கட்சி எல்லைகளுக்கு அப்பாற்பட்டு, திருச்சி நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் என்ற முறையில் “இவர்கள் என் மக்கள்; இது என் கிராமம்” என்ற உணர்வோடு உங்களுக்காக என் பணிகளை மேற்கொள்வேன் என்று நம்பிக்கை அளித்திருந்தேன். இதற்காக அப்போதே, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்து இதுகுறித்து மனு அளித்தேன்.மக்களின் விருப்பத்திற்கு மாறாக எந்த நிலைப்பாடையும் எடுக்க மாட்டோம் என்று நல்லவிதமாக எனக்கு பதில் அளித்தார்கள்.

சுற்றுச்சூழல் துறை அதிகாரிகள் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளுக்கு ஆய்வறிக்கை அனுப்பியுள்ளதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் என்னிடம் தெரிவித்தார். அதேபோல, நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசுவிடம் எனது இந்த கோரிக்கையோடு விரிவாக நான் உரையாடியபோது,ஒரு தொழிற்சாலை அமைப்பதற்கு முன் Consent to Establish (CTE) அனுமதியையும், கட்டுமானம் முடித்து அந்தத் தொழிற்சாலை தனது செயல்பாட்டைத் தொடங்குவதற்கு முன் Consent to Operate (CTO) அனுமதியையும் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடம் பெறவேண்டும் என்றும்,பிசானத்தூர் கிராமத்தில், உயிரி

மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு ஆலை (Bio—Medical Waste Unit) அமைக்க முதற்கட்ட Con—sent to Establish (CTE) அனுமதி மறுக்கப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

அதாவது, பிசானத்தூர் கிராமத்தில் இந்த உயிரி மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு ஆலை இனி அமைவதற்கான வாய்ப்பே இல்லை. இது, புதுக்கோட்டை மாவட்ட, பிசானத்தூர் கிராம மக்களுக்கு, அவர்களின் ஒற்றுமைக்கு, அவர்களின் அறவழி போராட்டத்திற்கு, அவர்களின் நம்பிக்கைக்கு கிடைத்த மாபெரும் வாழ்வாதார வரலாற்று வெற்றியாக நான் கருதுகிறேன். பசுமை கிராமமாக குடியரசுத் தலைவர் விருது பெற்ற இந்த அழகிய கிராமத்தின் சுற்றுச்சூழல், விவசாயம், நீராதாரங்கள், மக்களின் உடல்நலம் ஆகியவை பாதுகாக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையை உருவாக்கித்தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கும், நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசுவுக்கும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத் தலைவர் டாக்டர் எம். ஜெயந்திக்கும், சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றத் துறை கூடுதல் தலைமைச் செயலர் சுப்ரியா சாஹூக்கும், துறை இயக்குநர் ராகுல்நாத்க்கும், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அருணாவுக்கும், மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை பிசானத்தூர் கிராம மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

---




**மதுரை ரேஸ்கோர்ஸ் சாலையில் உள்ள சர்வதேச ஹாக்கி மைதானத்தில் , நடைபெற்றுவரும் 14வது உலககோப்பை ஆடவர் இளையோர் ஹாக்கி விளையாட்டு தொடரில், பங்கேற்பதற்காக (30.11.2025) மதுரை மாநகருக்கு வருகை புரிந்துள்ள நமது இந்திய ஆடவர் இளையோர் ஹாக்கி அணிக்கு மாநகர காவல் ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, மதுரை விமான நிலையத்தில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து, மாநகர காவல் துணை ஆணையர் (தெற்கு ) அவர்கள் உற்சாக வரவேற்பு அளித்தார்.**

# தனியார் பள்ளிகளுக்கு கட்டணம் விடுவிப்பு

பள்ளிக்கல்வித் துறை சார்பில், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான, ஆர்.டி.இ., கட்டணத்தை, தனியார் பள்ளிகளுக்கு விடுவித்து, அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

கட்டாய கல்வி உரிமை சட்டத்தின்படி, தனியார் பள்ளிகளில், சமூக, பொருளாதாரத்தில் பின் தங்கியோரின் குழந்தைகளுக்கு, 25 சதவீத இடங்களை ஒதுக்க வேண்டும். அவர்களுக்கான கல்வி கட்டணம், மத்திய — மாநில அரசுகளின் பங்களிப்போடு வழங்கப்படுகின்றன.

கடந்த 2013ல் இருந்து 2023 வரை, எல்.கே.ஜி., முதல் எட்டாம் வகுப்பு வரை படித்த மாணவ — மாணவியருக்கு கல்விக்கட்டணம் செலுத்தப்பட்ட நிலையில், 2023 — 24 மற்றும் 2024 — 25ம் கல்வியாண்டுக்கான கல்விக்கட்டணத்தை, தற்போது தமிழக பள்ளிக்கல்வி துறை விடுவித்து, அரசாணை வெளியிட்டு உள்ளது.




அதன்படி, கடந்த 2023 — 24ம் கல்வியாண்டில், 7,594 பள்ளிகளில் படித்த மாணவர்களுக்காக, 424 கோடியே 98 லட்சத்து 89,724 ரூபாய்; 2024 — 25ம் ஆண்டில், 7,609 பள்ளிகளில் படித்த 4 லட்சத்து 45,961 மாணவர்களுக்கான கல்விக் கட்டணமாக, 45 கோடியே 85 லட்சத்து 9,831 ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.



நீலகிரி மாவட்ட ஆட்சியர் பொது நூலகதுறையின் சார்பில், சிறந்த வாசகர் வட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட கோத்தகிரி கிளை நூலகத்திற்கு மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களால் விருது மற்றும் பாராட்டுச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இதனை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு இ.ஆ.ப., அவர்களிடம் நேரில் காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

# “மதுரைக்கு எது தேவை என்பதை மக்கள் முடிவு செய்வார்கள்”

## முதல்வர் மு.க. ஸ்டாலின்!



சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவுப்படி திருப்பரங்குன்றம் தீபத்தூணில் 04.12.2025 அன்று தீபமேற்ற ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்காக பா.ஜ.க மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் பா.ஜ.க தொண்டர்கள் ஏராளாமானோர் திருப்பரங்குன்றத்தில் குவிந்தனர். இதனையடுத்து மலை மீது ஏறி தீபம் ஏற்ற முயன்றனர். அப்போது, 144 ரத்து உத்தரவுக்கு எதிராக தமிழக அரசு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய உள்ளது. அதனால் அங்கிருந்து அனைவரும் கலைந்து செல்ல வேண்டும் என்று அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்து போலீசார் அவர்களை தடுத்து நிறுத்தினர்.

இருப்பினும், பா.ஜ.க தொண்டர்கள் அங்கிருந்து கலைந்து செல்லாமல் போலீசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து, ‘கலைந்து செல்லவில்லை என்றால் கைது செய்யப்படுவீர்கள்’ என்று போலீசார் எச்சரிக்கை விடுத்தனர். இதனால், போலீசாருக்கும் பா.ஜ.கவினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அதனை தொடர்ந்து, மலை உச்சியில் தீபம் ஏற்ற வேண்டும் என்று கூறி நயினார் நாகேந்திரன் உள்ளிட்ட பா.ஜ.க தொண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அனுமதியின்றி போராட்டம் நடத்தியதால் பா.ஜ.க மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் பா.ஜ.க மூத்த தலைவர் ஹெச்.ராஜா ஆகியோரை போலீசார் கைது செய்தனர்.

இதனால் திருப்பரங்குன்றத்தில் 2வது நாளாக மீண்டும் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் எக்ஸ் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “மாமதுரைக்குத் தேவை வளர்ச்சி அரசியலா அல்லது அரசியலா?. மக்கள் முடிவு செய்வார்கள். மெட்ரோ இரயில், எய்ம்ஸ் (AIIMS), புதிய தொழிற்சாலைகள் மற்றும் வேலைவாய்ப்புகள். இவைதான் மாமதுரையின் வளர்ச்சிக்காக அங்கு வாழும் மக்கள் கேட்பது” எனத் தெரிவித்துள்ளார்.

---




## கடலூர் டிஎஸ்பியாக தமிழ் இனியன் பொறுப்பேற்பு !

கடலூர் மாவட்ட புதிய காவல்துறை கண்காணிப்பாளராக தமிழினியன் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் இதற்கு முன் தென்காசியில் டிஎஸ்பியாக பணிபுரிந்து வந்தார். இவருக்கு பதிலாக கடலூரில் டிஎஸ்பியாக பணிபுரிந்த ரூபன் குமார் விழுப்புரம் மாவட்ட கோட்டகுப்பம் டிஎஸ்பி ஆக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். புதிய கடலூர் டிஎஸ்பியாக பொறுப்பேற்ற தமிழி இனியனுக்கு போலீஸ் அதிகாரிகள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.







# பெண் போலீஸாருக்கு சானிட்டரி நாப்கின் விநியோகிக்கும் தானியங்கி இயந்திரம் அறிமுகம்!

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் உத்தரவின்பேரில், சென்னை பெருநகரில் 43 காவல் பணியிடங்களில் பெண் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கான சானிட்டரி நாப்கின் விநியோகிக்கும் இயந்திரங்கள் அமைக்கப்பட்டு, மத்திய குற்றப்பிரிவு, கூடுதல் ஆணையாளர் அதன் இயக்கத்தை துவக்கி வைத்தார்.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப., அவர்கள் உத்தரவின்பேரில், சென்னை பெருநகர காவல்துறையில் பணிபுரியும், ஆண் மற்றும் பெண் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களின் பணிச்சுமை, அத்தியாவசிய தேவைகள் மற்றும் நலன்கள் மீது தனிக்கவனம் செலுத்தி, காவலர் குறை தீர்க்கும் நாள், காவல்துறை பல்பொருள் அங்காடி நவீனமாக்கல், வாராந்திர ஓய்வு, இலவச மருத்துவ முகாம்கள் என பல்வேறு நலன்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், 59 வயதுடைய காவல் ஆளிநர்களுக்கு இரவு பணி விலக்கல், 25 வருடங்கள் பணிமுடித்த பெண் காவல் ஆளிநர்களுக்கு இரவு பணி விலக்கலுடன், சுழற்சி முறையில் ஓய்வு, ஆயுதப்படை பெண் காவலர்களுக்கு ஆயுதப்படை வளாகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய ''பூவையர் புத்துணர்ச்சி சிற்றில்'' என்ற பெயரில் தங்கும் விடுதி, பணி நிமித்தம் சென்னைக்கு வருகை தரும் மற்ற மாவட்ட பெண் காவலர்களுக்கு



பெண் காவலர் தங்கும் விடுதி, என பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், காவல் குடும்பத்தினருக்காக காவலர் குடியிருப்புகளில் அத்தியாவசிய தேவைகள் மேம்படுத்துதல், காவல் குடும்ப பெண்களுக்கு தையல் மற்றும் கணினி பயிற்சிகள் வழங்கப்பட்டு வேலை வாய்ப்புகள் வழங்குதல், பட்டப்படிப்பு முடித்த காவல் குடும்ப வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பு முகாம்கள் என பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப., அவர்கள் குடும்ப சூழலையும், காவல்துறை பணியையும் சமமாக பாவித்து, பாதுகாப்பு, கண்காணிப்பு, நீதிமன்ற பணிகள் என காவல்துறையின் அனைத்து பணிகளிலும் கடின உழைப்புடன் குறைகளின்றி அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் பெண் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களின் நலனை கருத்தில் கொண்டும்,, அவர்களுக்கு அத்தியாவசிய தேவைகள் மற்றும் பொருட்கள் தடைகளின்றி கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டும், அவர்கள் பணியாற்றும் இடங்களில் குறைந்த விலையில், சானிட்டரி நாப்கின் விநியோகிக்கும் இயந்திரங்கள் அமைக்க உத்தரவிட்டார்.

அதன்பேரில், சென்னை பெருநகரில், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் (AWPS), ஆயுதப்படை I மற்றும் II வளாகங்கள், மோட்டார் வாகனப்பிரிவு, சென்னை காவல்துறை ஆணையர் அலுவலகம் மற்றும் சென்னை பாதுகாப்பு காவல் பிரிவு அலுவலகம் உள்பட 43 காவல் பணி இடங்களில் குறைந்த விலையில், சானிட்டரி நாப்கின் விநியோகிக்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டு, சென்னை பெருநகர காவல், மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையாளர் திருமதி.A.ராதிகா, இ.கா.ப., அவர்கள் (04.12.2025), சென்னை பெருநகரில் பொருத்தப்பட்டுள்ள சானிட்டரி நாப்கின் விநியோகிக்கும் இயந்திரத்தின் இயக்கத்தை புதுப்பேட்டை, ஆயுதப்படை வளாகத்தில் பெண் காவல் துறையினர் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். காவல் ஆணையாளர் அவர்களின் இத்திட்டத்தின் மூலம், சென்னை பெருநகர காவல், சட்டம், ஒழுங்கு, குற்றப்பிரிவு, போக்குவரத்து, ஆயுதப்படை, மோட்டார் வாகனப்பிரிவு மற்றும் மத்திய குற்றப்பிரிவு, சென்னை பாதுகாப்பு காவல் பிரிவு உள்ளிட்ட சிறப்பு பிரிவுகளில் பணியாற்றி வரும் சுமார் 5,900 பெண் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் பயனடைவார்கள் என தெரிவிக்கப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் துணை ஆணையாளர்கள் முனைவர் திருமதி.வனிதா (பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றத்தடுப்பு பிரிவு) திரு.M.இராதாகிருஷ்ணன், (ஆயுதப்படை), திருS.அன்வர்பாஷா, (ஆயுதப்படை—2) காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்கள் கலந்து கொண்டனர்.



திருப்பரங்குன்றத்தில் அசராது சட்டம் ஒழுங்கு காத்த தமிழ் நாடு காவல் துறையில் நீதி நெறி தவறாமல் நேர்மையுடன் சட்டத்தின் முன் குற்றம் குற்றமே என்று பணியை சிறக்க செய்து கொண்டு வரும் மதுரை காவல் ஆணையர் லோகநாதன் அவர்களுக்கு வாழ்த்துகள்.




திருச்சி குடிமை பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு பிரிவு எஸ்.பியாக இருந்த சியாமளா தேவியை, திருச்சி தலைமையிட துணை ஆணையராக பணியிட மாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவு



# கலைஞர் கனவு இல்லம் திட்டம்

## பயனாளிகளை அச்சுறுத்தும் அதிகாரிகள்

தமிழக அரசின் ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டம், பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களுக்கு தங்கள் சொந்த இல்லத்தை கட்டித் தருவதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு முக்கிய நலத்திட்டம். “அனைவருக்கும் வீடு” என்ற நோக்குடன் உருவாக்கப்பட்ட இந்தத் திட்டம், முதலில் மக்களின் வாழ்வில் உறுதியான மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதிகாரிகள் பின்பற்றும் நடைமுறைகள், இந்தத் திட்டத்தின் நோக்கையே பல கேள்விக்குறிகளால் சூழ்ந்துவிட்டது.

### விதிமுறையா... அழுத்தமா?

திட்டத்திற்கான தொகையை அரசு கட்டிடப் பணிகள் ஒரு குறிப்பிட்ட நிலையை அடைந்த பின் மட்டுமே வழங்குகிறது. இது தாராளமாக பார்க்கும்போது தவறில்லை; ஆனால் நடைமுறையில், அதிகாரிகள் பயனாளர்களை அவர்களுக்கே சொந்தமான பணத்தில் வீட்டு பணிகளை குறிப்பிட்ட காலக்கட்டுக்குள் முடிக்க அழுத்தம் கொடுத்து வருவது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

“முதலில் வீடு கட்டுங்கள், பிறகு அரசின் பணம் வரும்” என்பது அதிகாரிகள் தரும் நேரடி அறிவுறுத்தலாக உள்ளது. அப்படியானால், இந்தத் திட்டம் மக்களை உதவுவதற்கா? அல்லது கடன் வாங்கி சிக்கலில் விழ வைப்பதற்கா? என்ற கேள்வி எழுகிறது.

### கட்டுமானச் செலவின் ஏற்ற-இறக்கம்: யார் பொறுப்பு?

ஒரு வீட்டை கட்டுவதில் மணல், சிமெண்டு, இரும்பு, போக்குவரத்து கட்டணம், கூலி—எல்லாம் தினசரி விலை மாற்றங்களைக் கொண்டவை. ஒரு காலக்கட்டத்தை நிர்ணயித்துவிட்டதால், விலை உயர்வு காரணமாக செலவு அதிகரித்தாலும் அதை சமாளிக்க வேண்டியது பயனாளர்தான். கூடவே, மழை, தொழிலாளர்கள் பற்றாக்குறை போன்ற கணிக்க முடியாத காரணங்களால் பணியில் தாமதம் ஏற்பட்டாலும், அதற்கான பொறுப்பு யாருடையது?

அரசு வழங்கும் தொகை சரியான நேரத்திற்கு கிடைக்காததால், மக்கள் கடன் வாங்கி வீடு முடிக்க, அதன்பின் அரசின் தொகை கிடைத்தவுடன் வட்டியும் சேர்த்து கடன்தொகையைச் settlement செய்ய வேண்டிய நிலை உருவாகிறது. இதன் மூலம் ஒருபுறம் வீடு கிடைக்கலாம்; ஆனால் மறுபுறம் அவர்கள்

புதிய கடன் சுமையில் சிக்கிக் கொள்ள நேரிடுகிறது.

### தேர்தல் நெருங்குகிறது: தடை விதிகள் வருமா?

தேர்தல் அறிவிப்புக்குப் பின், அரசு நிதி பரிவர்த்தனைகள் பலவும் தேர்தல் ஒழுங்குக் குழுவின் கட்டுப்பாட்டுக்குள் வரும். இதனால் பயனாளர்கள் பெற வேண்டிய தொகை தாமதிக்க வாய்ப்பு உள்ளது.

இது தாமதித்தால், அரசு நிர்ணயித்த காலக்கெடு தாண்டப்படும் காலக்கெடு தாண்டினால், அடுத்த கட்ட பணம் நிறுத்தப்படும்—பணம் நிறுத்தப்பட்டால், வீட்டு கட்டுமானம் பாதியில் நின்றுவிடும்.

அப்படியானால், இத்திட்டத்தின் பயன் எங்கே? பயனாளர்களின் நிலை என்ன?

### மக்கள் அலைய வேண்டியது ஏன்?

பணத்தைப் பெறுவதற்காக மக்கள் பலமுறை அலுவலகங்களுக்கு சென்று விரைந்து ஓட வேண்டிய சூழல் உள்ளது. ஆய்வுகள், சரிபார்ப்புகள், கையொப்பங்கள்—அனைத்தும் அவர்கள் தாமதங்களில் சிக்க வைக்கின்றன. மக்களின் வாழ்வை எளிதாக்கவே நலத்திட்டங்கள்; ஆனால் அவை சிக்கலை அதிகரித்துக்கொண்டே போகின்றன என்ற உணர்வு பொதுமக்களிடத்தில் உருவாகியுள்ளது.

### சிறந்த தீர்வுக்கான எதிர்பார்ப்பு

திட்டத் தொகை தவறாக பயன்படுத்தப்படாமல் இருக்க விதிமுறைகள் அவசியம் என்பது உண்மை. ஆனால், அந்த விதிமுறைகள் வீடு கட்ட முடியாமல் மேலும் துன்புறும் விதத்தில் இருக்கக்கூடாது.

அதிகாரிகளின் நடவடிக்கைகள், சந்தை விலைகளின் மாற்றம், இயற்கை தடங்கல்கள் ஆகியவற்றைக் கணக்கில் கொண்ட ஒரு நெகிழ்வான காலக்கெடு, பயனாளர் தொகையை வேகமாக வழங்கும் திருத்தப்பட்ட நிதி விடுவிப்பு முறை, மற்றும் பயனாளரை கடன்சுமையில் தள்ளாத நடைமுறை வழிகாட்டுதல்கள் இவை அனைத்தும் இன்றே அவசியமாகின்றன. இந்தப் பிரச்சனைக்கு அரசு கவனம் செலுத்துமா? மக்களுக்கு உண்மையான உதவி கிடைக்குமா? என்று மக்கள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

நலத்திட்டத்தின் நோக்கம் சாதாரண மக்களை உயர்த்துவதே என்பதைக் அரசு நினைவில் கொள்ளும் என்று நம்புகிறோம்.

---



சென்னை பெருநகர காவல் கீழ்பாக்கம் மாவட்டத்தில் டிட்வா புயலால் பாதிப்படைந்த பச்சைக்கல் வீராசாமி தெரு அயனாவரம், ஆஸ்பிரின் கார்டன் மற்றும் சுவாமிதாஸ்புரம் ஆகிய பகுதிகளில் கீழ்பாக்கம் காவல் மாவட்ட துணை ஆணையாளர் திருமதி.ஜரீனா பேகம் அவர்கள் அங்கு வசிக்கும் பொது மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கினார்.





# பேராவூரணி தொகுதியில் வலுவிழக்கும் திமுக..!

## மக்களின் ஐந்து ஆண்டு கோரிக்கை.. நிறைவேற்றித் தராத எம்.எல்.ஏ அசோக்குமார்

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி பேரூராட்சி, எம்ஜிஆர் நகர் பகுதியில் சுமார் 50—க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்தக் குடியிருப்பு பகுதியின் முக்கிய தேவைகளில் ஒன்று — சுடுகாடு மற்றும் அதற்குச் செல்லும் பாதை. ஆனால் இன்று அந்தப் பாதையின் நிலைமை மிகவும் சீரழிந்ததாக உள்ளது. சமீபத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்களில் காணப்படும் விதமாக, சேறும், சதையும், குப்பையும் குவிந்து, சுடுகாட்டின் உள்ளேயும் பாதையிலும் மக்கள் செல்ல முடியாத சூழல் உருவாகியுள்ளது.

### பராமரிப்பின்றி பல ஆண்டுகள் – பொதுமக்களின் குற்றச்சாட்டு

பேராவூரணி பேரூராட்சியில் பல பகுதிகளில் உள்ள சுடுகாடுகள் பராமரிப்பு செய்யப்படுகிறதென மக்கள் கூறினாலும்,

எம்ஜிஆர் நகர் சுடுகாடு மட்டும் எந்த பராமரிப்பும் பெறாமல் அசுத்தமாகவும் அபாயகரமாகவும் உள்ளதாக அவர்கள் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.



முள் புதர்கள், குப்பை, மழைநீர் நின்று புழுதி ஆகியவை நிரம்பி, மரணச்சடங்குகளுக்குப் கூட மக்கள் போக முடியாத சூழலை உருவாக்கியுள்ளது. இது போதாமல், பேராவூரணி பேரூராட்சி குப்பை வண்டி கூட இங்கு தவறாக குப்பை கொட்டுகின்றது என்ற புகாரும் எழுந்துள்ளது.

இதைப் பற்றி மக்கள் பலமுறை தெரிவித்தபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது அவர்களின் வேதனை.

கிராம மக்கள் கேள்வி — “ஐந்தாவது வார்டு கவுன்சிலரும், பேரூராட்சி பெருந்தலைவரும் நடவடிக்கை எடுப்பார்களா?”

இந்தப் பகுதி பேராவூரணி பேரூராட்சி பெருந்தலைவர் திருமதி சாந்தி சேகர் மற்றும் ஐந்தாவது வார்டு கவுன்சிலரின் அதிகாரப்பரப்பு. தேர்தல் தேதி நெருங்கியுள்ள நிலையில், “இப்போதாவது சுடுகாடு சீரமைக்கப்படுமா?”



என்ற கேள்வி மக்களிடையே தினமும் கேட்கப்படுகிறது.

இங்கு மட்டும் இல்லாமல் ஆதனூர், கருப்பமனை, நவக்கொல்லைக்காடு என இன்றும் சாலை இல்லாத, சுடுகாடு இல்லாத பகுதிகளின் பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது. இன்று 2025—ல் கூட இந்த பகுதிகள் பயணிக்க முடியாத அளவுக்கு மோசமாக உள்ளன.

- சாலைகள் பெரும்பாலும் பயணிக்க முடியாத அளவுக்கு குன்டும் குழியுமாக உள்ளது.
- சில இடங்களில் சாலை என்றே ஒன்று இல்லை.
- மருத்துவ அவசரகால நிலையிலும் வாகனங்கள் செல்ல முடியாத நிலை என்பதே மக்கள் வேதனை.

### சுடுகாட்டை காணோம் ?

மக்களின் வார்த்தை :“நவக்கொல்லைக்காட்டில் ஒரு சரியான சுடுகாட்டு வளாகம் அல்லது கட்டிடம் கூட இல்லை என்பது மாநிலத்திற்கே அவமானம்” புதிதாக கட்டிடம் கட்டுவதாக இருந்த கட்டிடத்தை இடித்துவிட்டு சென்றவர்கள் மீண்டும் கண்ணில் தென்படவே இல்லை.

இது தொடர்பாக பார்காத அதிகாரிகளும் இல்லை கொடுக்காத மனுக்களும் இல்லை. சமீபத்தில் கூட இது போன்ற பிரச்சனைகள் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு வந்த பதில் எண்:155/2025 அரசு கடிதத்தில் கூறியிருப்பதாவது

- குடிமக்கள் முறையீடு தொடர்பாக சுகாதாரம், ஊராட்சி மற்றும் பேரூராட்சி துறைக்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளது.
- ஆய்வு செய்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என கூறப்பட்டுள்ளது.
- பொதுமக்கள் சுத்தமான சூழலில் வாழ வழிமுறைகள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மக்கள் கூறுவதாவது:

“காகிதத்தில் எல்லாம் எழுதிக்கிடக்கும்... நிலத்தில் மாற்றம் எது? ஆய்வு எல்லாம் ஆய்வாகத்தான் இருக்கிறது, செயல் எப்போது?”

அரசியல் மாற்றங்கள் இருந்தும் நிலைமையே மாறவில்லை.இந்தத் தொகுதி கடந்த பல ஆண்டுகளில் பல்வேறு கட்சிகளின் கையில் இருந்தது. முன்னாள் காலங்களில்






அதிமுக மற்றும் தேமுதிக ஆகிய கட்சிகள் இந்தப் பகுதியை நிர்வகித்தன. கடந்த ஐந்து ஆண்டுகளாக இது தற்போதைய திமுக எம்.எல்.ஏ. திரு. அசோகுமார் அவர்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது.

ஆனால் மக்களின் கூற்றுப்படி, கடந்த ஐந்து ஆண்டுகளில் சிறப்பு ஒரு குறிப்பிட்ட சமூகத்துக்கே உதவிகள் சென்றதாகவும், சில சமூகங்கள் பூரணமாக புறக்கணிக்கப்பட்டதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

மேலும்,

- பல பகுதிகளில் சாலை இல்லை, இருந்த இடங்களில் ஆபத்தான நிலை,
- கழிவுகள் மேலாண்மைக்கான திட்டங்கள் செயல்படவில்லை,
- எந்த அடிப்படை வசதிகளும் மேம்படவில்லை,
- மக்களிடமிருந்து எழுந்த புகார்கள் கவனிக்கப்படவில்லை —

என்று மக்கள் தங்களின் அதிருப்தியை வெளிப்படுத்துகின்றனர்.

“ஒரு தொகுதியின் எம்.எல்.ஏ அனைவருக்கும்தான்; ஆனால் இங்கு பாகுபாடே அதிகம்” என சிலர் கூறுகின்றனர்.

தேர்தல் நெருங்குகிறது — இப்போது மாற்றம் வருமா?

தேர்தல் விரைவில் அறிவிக்கப்பட உள்ளதால், “குறைந்தது இப்போதாவது சாலை, சுடுகாடு, குப்பை மேலாண்மை போன்ற அடிப்படைகள் சீரமைக்கப்படுமா?”என்ற நம்பிக்கை சிலருக்கு உள்ளது. அதே நேரத்தில், “ஐந்து ஆண்டுகள் எதுவும் செய்யாமல் இருந்தவர், தேர்தல் முன்பாக திடீரென செயல் ஆற்றுவாரா?” என்று சந்தேகத்துடன் காத்திருக்கும் மக்களும் உள்ளனர்.

### மக்களின் எதிர்பார்ப்பு

- சுடுகாடு உடனடியாக சுத்தம் செய்து பராமரிப்பு செய்யப்பட வேண்டும்
- சுடுகாட்டிற்குச் செல்லும் பாதையில் சாலைவடிவமைப்பு செய்யப்பட வேண்டும்
- குப்பை கொட்டும் தவறான நடைமுறைக்கு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்
- சமூக அடிப்படையிலான பாகுபாடின்றி அனைவருக்கும் சமமாக உதவிகள் கிடைக்க வேண்டும்

இவற்றை ஏற்று நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது தற்போதைய முக்கிய கேள்வி.

மக்கள் கூறுவது ஒன்றே —

“நாங்கள் யாரையும் எதிர்த்து அல்ல, நம் பகுதி வளரவேண்டும் என்பதற்காகத்தான் பேசுகிறோம்.” தேர்தல் நெருங்கும் நேரத்தில், மக்களின் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படுமா? என்று அனைவரும் கவனத்துடன் காத்திருக்கின்றனர்.

நல்லது நடக்கட்டும்... மக்கள் வாழ்வில் மாற்றம் உண்டாகட்டும்.

# சீர்காழி மண்ணின் மைந்தன்
## காவல்துறை தேசிய கபாடி வீரர் A.ராஜேஷ்(எ) சுமன்..!



கடற்கரையை ஒட்டிய மாவட்ட, மீனவர் கிராமத்தவர்களின், உடற்திறன், கபாடி எப்போது சிறப்பானது, டிபன்ஸ் தனித்தன்மை வாய்ந்தது...

மேற்கண்ட சிறப்புமிக்க நாகபட்டினத்தில் இருந்து பிரிந்த மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி, ஆர்பாக்கத்தில் 1981 ஆம் ஆண்டு பிறந்தவர். தற்போது தஞ்சை மாவட்டம், நாச்சியார்கோயில் காவல்நிலைய ஆய்வாளராக(Inspector) பணியாற்றி வருகிறார்..

தனது பள்ளிப்படிப்பை SMHS பள்ளி, சீர்காழியில் முடித்தவர்.. AVC கல்லூரி மயிலாடுதுறையில் B.Com படிப்பை முடித்தவர். கோவை, மாருதி உடற்கல்வி கல்லூரியில் B.PEd., படிப்பை முடித்தவர். பின்பு M.PEd, M.Philயை சிதம்பரம், அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் முடித்தவர். இவரின் தந்தை அன்பழகன் (இவரும் ஓர் கபாடி வீரர்) அவர்களால் தொடங்கப்பட்ட அன்பு பிரதர்ஸ், ஆர்பாக்கம் அணியில் கபாடி பயணத்தை தொடங்கியவர்.

ஒருங்கிணைந்த நாகபட்டின மாவட்ட கபாடி அணிக்காக பல முறை ஆடியவர். தமிழக அணிக்காக தேசிய சீனியர் பிரிவில் விளையாடியவர்.

2002–ல் பாரதியார் பல்கலைகழக அணிக்காக, அகில இந்தியா பல்கலைகழக போட்டியில் கலந்து கொண்டவர். 2005–ல் நடைபெற்ற அகில இந்தியா பல்கலைகழக போட்டியில் அண்ணாமலை பல்கலைகழக அணி, இரண்டாம் இடம் பெற்றது. இந்த தொடரில் Runnerup ஆனாலும், சிறப்பாக விளையாடி, தொடர் நாயகன் விருதினை ராஜேஷ்(சுமன்) அவர்கள் பெற்றது, மிகச்சிறப்பு...

இந்திய பல்கலை கழக கபாடி அணிகளின் சிறந்த கபாடி வீரர் விருது பெற்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்தவர். 2008–ம் வருடம் தமிழக காவல்துறையில், இவர் Sports Quota–வில் SI ஆக வேலை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருடன், சிறந்த கபாடி வீரர்கள் கன்னியாகுமரி, ஜானி செல்லப்பா, திருச்சி கார்த்தி, திண்டுக்கல் ரஞ்சித்பாபு,நெல்லை சுடலைமணி, வடுவூர் இளங்கனி, மதுரை ரமேஷ்குமார் என 7 பேர் SI ஆக Sports Quota வில் தேர்வு பெற்றார்கள் என்பது சிறப்பு.

இவர் சிறந்த லெப்ட் கார்னர் + ரைடர், (ஆல்ரவுண்டர்) ஆவர்.. கிப் (இடுப்பை பிடித்தல்) எடுத்தலில் (Waist hold) மிகச் சிறந்த தனித்தன்மையான தலைசிறந்த வீரர்...

தமிழகத்தின் மிகச்சிறந்த வீரர்களான (ரைடர்கள்), மறைந்த சுரேந்திரமுகன், காவல்துறை மேட்டூர் ராஜா, இந்திஜித், பாப்பம்பட்டி பழனிச்சாமி என பலரின் ஆட்டம் தனக்கு பிடிக்கும் என்றும், ICF சுரேஷ், வடுவூர் முத்து, என பல வீரர்களின் தடுப்பாட்டமும் தனக்கு பிடிக்கும் என தெரிவித்தார்.

தனது கபாடியின் ரோல்மாடல் தனது தந்தை அன்பழகன் என தெரிவித்தார். அவரும் சிறந்த கபாடி வீரர் (ஆசிரியர்) என்பது குறிப்பிடத்தக்கது.

தனது கபாடி வாழ்வில் பயணித்த, பயிற்சியாளர்கள், வழிகாட்டிகள், நண்பர்களுமான, அண்ணாமலை பல்கலைகழக பாலமுருகன், குலோத்துங்கன், சுப்பிரமணியம், வல்லம் ஆசைத்தம்பி, மாயவரம் சசிக்குமார், ஹென்றி மற்றும் நாகை, மாயவரம் கபாடி நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகள் பல தெரிவித்தார்.

இளம் தலைமுறை வீரர்கள், எந்த கெட்ட பழக்கமும் இல்லாமல், கடினமாக பயிற்சி, விடாமுயற்சி உடன் செயல்பட்டால், உங்கள் கபாடி மற்றும் வாழ்வு சிறக்கும் என அறிவுறுத்தினார்...

இன்றும் இளம் கபாடி வீரர்களை ஊக்கப்படுத்துவது, தனது சொந்தஊர் அணிக்கு வழிகாட்டுவது என கபாடி உடன் தொடர்ச்சியான தொடர்பில் உள்ள நல் உள்ளம்படைத்தவர்.. பணிச்சுமையினால் பயிற்சி அளிக்க முடியவில்லை என ஆதங்கப்பட்டார்.

உங்கள் காவல்துறை பணி உடன், கபாடி பணியும் சிறக்க வாழ்த்துகிறோம்.

# நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் மீது இம்பீச்மெண்ட் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

## தொல்.திருமாவளவன் வலியுறுத்தல்



திருப்பரங்குன்றம் பிரச்சினையில் மட்டுமல்லாது பல்வேறு பிரச்சனைகளிலும் பொது அமைதியை சீர்குலைக்கும் விதமாகத் தனது பதவியைத் தவறாகப் பயன்படுத்தும் ஜி.ஆர்.சுவாமிநாதனை நீதிபதி பதவியில் இருந்து நீக்குவதற்கு இம்பீச்மெண்ட் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என விசிக தலைவர் தொல்.திருமாவளவன் வலியுத்தியுள்ளார்.

இது குறித்து தொல்.திருமாவளவன் MP வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:—

திருப்பரங்குன்றத்தில் கலவரம் ஏற்படாமல் தடுத்து அமைதியை நிலைநாட்டிய தமிழ்நாடு அரசுக்கும், கலவரத்தில் ஈடுபட்ட பயங்கரவாதிகளின் ஆத்திரமூட்டலுக்கு இடம் கொடுக்காமல் மத நல்லிணக்கத்தைக் காப்பாற்றிய திருப்பரங்குன்றம் பொதுமக்கள் அனைவருக்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருப்பரங்குன்றத்தில் மதக் கலவரத்தை ஏற்படுத்தும் விதமாகப் பயங்கரவாதிகள் தொடர்ந்து வெறுப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்தனர். வழக்கமாக கார்த்திகை தீபம் ஏற்றும் இடத்தை விட்டு விட்டு, வரலாற்று ஆதாரங்களுக்கு மாறாக வேறு ஒரு இடத்தில் தீபம் ஏற்றுவதற்கு முயற்சித்தார்கள். அவர்களது ஆத்திரமூட்டலுக்கு இடம் கொடுக்காமல் வழக்கமான இடத்தில் தீபம் ஏற்றி சுமூகமான முறையில் தீபத் திருவிழாவை தமிழ்நாடு அரசு நடத்தியது. இந்நிலையில் அங்கு ஒரு கலவரத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு வெளியூர்களில் இருந்து வந்த சனாதனப் பயங்கரவாதக் கும்பல் அங்கு பாதுகாப்புக்கு இருந்த காவல்துறை அதிகாரிகளைத் தாக்கிக் காயப்படுத்தியதோடு பொதுச் சொத்துகளையும் நாசப்படுத்தியது. கலவரத்தில் ஈடுபட்ட பயங்கரவாதிகளை யுஏபிஏ சட்டத்தில் கைது செய்யவேண்டும் என வலியுறுத்துகிறோம்.

திருப்பரங்குன்றத்துக்கு வெளியூர்களிலிருந்து வந்து கலவரத்தில் ஈடுபட்ட பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளார். கார்த்திகை

தீபம் ஏற்றும் நிகழ்ச்சி அமைதியாக நடந்து முடிந்த நிலையில் அங்கு வன்முறையைத் தூண்டும் விதமாக தீபம் ஏற்றுவதற்குப் பயங்கரவாதிகளை அனுமதித்தது மட்டுமின்றி அவர்களுக்குத் துணையாக உயர் நீதிமன்றப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் சிஐஎஸ்எஃப் வீரர்களை அனுப்பியுள்ளார்.

இது அப்பட்டமான அதிகார மீறல் மட்டுமின்றி அரசமைப்புச் சட்டத்துக்கும், வழிபாட்டுத் தலங்கள் ( சிறப்பு விதிகள் ) சட்டம் 1991 க்கும் எதிரானதாகும். இப்படி சட்டத்துக்கு எதிராக செயல்பட்டதோடு, முழுவதும் மதுரை, திருப்பரங்குன்றம் பகுதிகளில் தேவையில்லாத சமூகப் பதற்றத்தை ஏற்படுத்தியதோடு, மாநிலம் முழுவதும் சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்க முயற்சித்த நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் மீது சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

திருப்பரங்குன்றம் பிரச்சினையில் மட்டுமல்லாது பல்வேறு பிரச்சனைகளிலும் பொது அமைதியை சீர்குலைக்கும் விதமாகத் தனது பதவியைத் தவறாகப் பயன்படுத்தும் ஜி.ஆர்.சுவாமிநாதனை நீதிபதி பதவியில் இருந்து நீக்குவதற்கு இம்பீச்மெண்ட் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தியா கூட்டணி கட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.






ஆதரவற்ற நிலையில் கிடந்த மூதாட்டியை காவல்துறை முன்னிலையில் உறவினர்களிடம் ஒப்படைத்த போது எடுத்த படம்.

## சாலையோரம் ஆதரவற்ற நிலையில் கிடந்த மூதாட்டியை

# சமூக ஆர்வலர் மீட்டு மருத்துவமனையில் சேர்த்து காவல்துறை உதவியுடன் உறவினர்களிடம் ஒப்படைத்தனர்!

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் ஆதரவற்ற நிலையில் மூதாட்டி ஒருவர் கிடந்துள்ளார்.

இது குறித்து தரங்கம்பாடி தாலுக்கா பெரம்பூர் கிராமத்தைச் சேர்ந்த பாரதிமோகன் அறக்கட்டளை நிறுவனர் பாரதிமோகன் என்பவருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அங்கு வந்த அவர் மூதாட்டியை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் மயிலாடுதுறை அரசு பெரியார் மருத்துவமனையில் சேர்த்துள்ளார்.

பின்னர் அவரது செல்போன் மூலம் வீடியோ எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு இருந்தார் இதனைப் பார்த்த கடலூர் மாவட்டம் பண்ருட்டி தாலுக்கா அங்கு செட்டி பாளையம் முருகன் கோவில் தெருவை சேர்ந்த ரங்கநாயகி என்பது தெரியவந்தது.

இதுகுறித்து அவரின் தம்பி ஆரோக்கியசாமி, தம்பி மகன் கண்ணன் ஆகியோர் அறக்கட்டளையின் நிறுவனர் பாரதிமோகனை தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தனர்.

பின்னர் அந்த மூதாட்டியை மயிலாடுதுறை காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டு காவல்துறை உதவி ஆய்வாளர் அருண்குமார் முன்னிலையில் தம்பி மற்றும் தம்பி மகனிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதுகுறித்து அறக்கட்டளையின் நிறுவனர் பாரதிமோகன் கூறுகையில் முதியவர்களை அவர்கள் உறவினர்களிடம் ஒப்படைப்பது காப்பகத்தில் சேர்ப்பது ஆதரவற்ற நிலையில் சாலை ஓரங்களில் யாசகம் எடுப்பவர்களுக்கு மதிய உணவு உள்ளிட்ட உதவிகளை எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி செய்து வருவதாக கூறினார்.

# தமிழக அரசின் தில்லி பிரதிநிதி வீட்டில் திருட்டு

## 6 தனிப்படைகள் விசாரணை



தஞ்சாவூரில் தமிழக அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதியும், முன்னாள் மக்களவை உறுப்பினருமான ஏ.கே.எஸ். விஜயன் வீட்டின் பூட்டை உடைத்து 87 பவுன் நகைகளைத் திருடிச் சென்ற மா்ம நபா்களைக் கைது செய்ய 6 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதியாக இருப்பவர் ஏ.கே.எஸ்.விஜயன். தஞ்சாவூரில் இருக்கும் இவரது வீட்டில் கொள்ளைச் சம்பவம் அரங்கேறியுள்ளது. இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

கடந்த 2021ல் திமுக ஆட்சி அமைந்தது முதலே தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதியாக இருந்து வருபவர் ஏகேஎஸ் விஜயன்.. மாஜி எம்பியான இவர், திமுகவின் மாநில விவசாயச் செயலாளராகவும் இருந்து வருகிறார். இவரது வீடு தஞ்சாவூரில் உள்ள சேகரன் நகரில் உள்ளது.

விஜயன் பணி நிமித்தமாக அடிக்கடி டெல்லி செல்லும் நிலையில், இவரது குடும்பத்தினரே இங்குப் பிரதானமாகத் தங்கியுள்ளனர். கடந்த சில நாட்களுக்கு முன்பு இவர்கள் வெளியூருக்குச் சென்றிருந்தனர். இதற்கிடையே இன்று காலை வீட்டிற்கு வந்த பார்த்த போது அதிர்ச்சி அடைந்தனர். பூட்டப்பட்டிருந்த வீட்டின் முன்பக்கக் கதவு உடைக்கப்பட்டு இருந்தது.

மேலும், வீட்டின் உள்ளே சென்று பார்த்தபோது, வீடு கொள்ளையடிக்கப்பட்டு இருந்தது தெரிய வந்தது. வீட்டில் இருந்த பணம், நகை என எல்லாவற்றையும் கொள்ளையர்கள் திருடிச் சென்றனர். இது தொடர்பாக உடனடியாக போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனடியாகச் சம்பவ இடத்திற்கு விரைந்த தஞ்சை தமிழ் பல்கலைக்கழக போலீசார், விசாரணையை ஆரம்பித்தனர். கைரேகை நிபுணர் சம்பவ இடத்தில் கைரேகைகளையும் சேகரித்தனர். மேலும், மோப்ப நாய் அழைத்து வரப்பட்டும் சோதனை நடத்தி வருகின்றனர்.

இது தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். முதற்கட்டமாக அங்கிருந்த சிசிடிவி காட்சிகளைக் கைப்பற்றி, ஆய்வு செய்து வருகின்றனர்.

இதனிடையே இந்த வழக்கில் காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் ஆர். சோமசுந்தரம் (தஞ்சாவூா் நகரம்), காயத்ரி (வல்லம்), ஆய்வாளா்கள் வி. சந்திரா (மருத்துவக் கல்லூரி), சோமசுந்தரம் (தாலுகா), முத்துக்குமாா் (வல்லம்), உதவி ஆய்வாளா் அருள் ஆகியோா் தலைமையில் 6 தனிப்படைகள் அமைத்து, விசாரணை நடைபெறுகிறது.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியை சேர்ந்த ஏ.கே.எஸ்.விஜயன், 1999 லோக்சபா தேர்தலில் நாகை தொகுதியில் முதல்முறையாகப் போட்டியிட்டு வென்றார். தொடர்ந்து 2004 மற்றும் 2009 லோக்சபா தேர்தல்களிலும் அவர் வெற்றி பெற்றிருந்தார். 2021 திமுக ஆட்சி அமைந்தபோது விஜயன் தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார்.

மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே பாலமாகச் செயல்படுவதே தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதியின் பொறுப்பாகும். முதல்வர் அல்லது அமைச்சர்கள் அரசு முறை பயணமாக டெல்லிக்குச் செல்லும்போது அலுவல் ரீதியான அனைத்து ஏற்பாடுகளையும் டெல்லி சிறப்புப் பிரதிநிதியே கவனித்துக் கொள்வார்.. மேலும், திமுகவின் நம்பிக்குரிய நபராகவும் விஜயன் பார்க்கப்படுகிறார்.

## சென்னை, நீலாங்கரை பகுதியில்

# சுமார் ரூ.16 கோடி மதிப்புள்ள இடத்தை போலி ஆவணங்கள் மற்றும் ஆள்மாறாட்டம் மூலம் மோசடி!



சென்னை, இராயபேட்டையைச் சேர்ந்த M.சிவகணேசன், ஆ/வ.38 என்பவர் RMC Traders Company பங்குதரார் என்றும் தன் நிறுவனத்தின் சார்பாக நீலாங்கரையில் கபாலீஸ்வரர் நகர் என்ற பெயரில் 60 ஏக்கரில் மனைப்பிரிவு (லேஅவுட்) போடப்பட்டுள்ளது.

அந்த மனைப்பிரிவின் முன் பகுதியில் உள்ள 1,050 சதுர மீட்டர் இடத்தை அரசு சாலை விரிவாக்கத்திற்கு நெடுஞ்சாலை துறை கையகப்படுத்தியதாகவும் அதற்கு ஈடாக அரசு ஒதுக்கீடு செய்த இழப்பீடு தொகை ரூ.16 கோடியை எதிரி நடராஜன் என்பவர் போலியான ஆவணம் மூலம் அரசுக்கு நில ஒப்படைப்பு செய்வதாக விற்பனை பத்திரம் நீலாங்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்து சட்டவிரோத இழப்பீடு தொகையை பெற்றுள்ளார் என்றும், அவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி சோழிங்கநல்லூர் கனம் District Munsif court ல் நடவடிக்கை வேண்டி தாக்கல் செய்த மனுவின் உத்தரவின் அடிப்படையிலும் கடந்த 10.02.2025ந் தேதி அன்று சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்களிடம் அளித்த புகார் மீது, சென்னை பெருநகர காவல், மத்திய குற்றப்பிரிவு நிலமோசடி புலனாய்வு பிரிவு, (LFIW) காவல் உதவி ஆணையாளர் அவர்களால் வழக்குப்பதிவு செய்து, காவல் ஆய்வாளரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி வழக்கில் விரைந்து நடவடிக்கை எடுக்க சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண் இ.கா.ப அவர்களின் உத்தரவின்பேரில், மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையாளர் திருமதி.A.ராதிகா, இ.கா.ப., அவர்கள் வழிகாட்டுதலின்பேரில், நிலமோசடி புலானாய்வு பிரிவு காவல் உதவி ஆணையாளர் மேற்பார்வையில், நிலமோசடி புலனாய்வு பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, வழக்கு சொத்து சம்பந்தமான ஆவணங்களை ஆய்வு செய்ததில் ஆழ்வார் திருநகரைச் சேர்ந்த எதிரி நடராஜன் என்பவர் ஆள்மாறாட்டம் மற்றும் போலி ஆவணங்கள் மூலம் இடத்தினை பதிவு செய்து, பின்னர் மேற்படி சொத்தை நெடுஞ்சாலை துறைக்கு ஒப்புவித்து, சுமார் ரூ.16 கோடி அரசு வழங்கிய பணத்தை முறைகேடாக பெற்றதும் தெரியவந்தது.

அதன்பேரில், இவ்வழக்கில் தலைமறைவாக இருந்த எதிரி சி.ஆ.நடராஜன், ஆ/வ55, த/பெ.அம்பலவாணன், ஆழ்வார் திருநகர், சென்னை என்பவரை காவல் குழுவினர் (02.12.2025) தேனாம்பேட்டை பகுதியில் கைது செய்து விசாரணை செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரி நடராஜன் விசாரணைக்குப் பின்னர் (02.12.2025) கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் (CCB & CB—CID), எழும்பூர் அவர்கள் முன்பு ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் சுப்பிரமணியபுரம் ஊராட்சியில் அமைந்துள்ள அரசினர் மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி மாணக்கர்களிடையே சிறப்புரையாற்றிய நிகழ்வின்போது, இந்த நிகழ்வில் அறந்தாங்கி சட்ட மன்ற உறுப்பினர் S.T ராமசந்திரன் MBA மற்றும் பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---







## பட்டுக்கோட்டை அரசு மருத்துவனையின் அட்டூழியம்!

பட்டுக்கோட்டையில் 108 ஆம்புலன்ஸ்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், ஊழியர்கள், மற்றும் அதிகாரிகளின் அலட்சியத்தாலும், பல மணி நேரம் கால் எலும்பு முறிவு ஏற்பட்டு போராடிக்கொண்டிருந்த முதியவரை உயர் அதிகாரிகளிடம் புகார் அளித்து இளைஞர்கள் மீட்டு பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்..




## 100 சதவீத பணிகள் நிறைவு செய்த 38 அலுவலர்களுக்கு பாராட்டு மற்றும் கௌரவிப்பு

அறந்தாங்கி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அறந்தாங்கி, ஆவுடையார்கோவில் மற்றும் மணமேல்குடி வட்டத்தைச் சேர்ந்த 285 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த முறை பணியினை மேற்கொண்டு வருகிறார்கள். இதில் 100 சதவீத வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த முறை பணியினை நிறைவு செய்த 38 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் பாராட்டுத் தெரிவித்து, கௌரவித்தார்கள்.





த.வெ.க தலைவர் விஜய் புதுச்சேரி மக்களை சந்திக்க 5 ஆம் தேதி ரோட்ஷோவிற்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், வருகின்ற 9 ஆம் தேதி உப்பளம் துறைமுக மைதானத்தில் த.வெ.க பொது கூட்டம் நடத்த அனுமதி கேட்டு அக்கட்சியினர் புதுச்சேரி சட்டம் ஒழுங்கு முதுநிலை கண்கானிப்பாளர் கலைவாணனிடம் கடிதம் அளித்தனர். இதனிடையே த.வெ.கவினர் கூட்டத்திற்கு அனுமதி கேட்ட துறைமுக வளாகத்தில் டிஐஜி சத்திய சுந்தரம், முதுநிலை காவல் கண்காணிப்பாளர் கலைவாணன், காவல்துறை உயர் அதிகாரிகள் நேரில் பார்வையிட்டு த.வெ.க பொது செயலாளர் ஆனந்த் உடன் ஆலோசனை நடத்தினர்.

---




நீலகிரி மாவட்டத்தில், தமிழ்நாட்டின் ஸ்டார்ட்ர் அப் சூழலியலை உலக தரத்திற்கு உயர்த்தும் நோக்கில், தமிழ்நாடு அரசின் ஸ்டார்ட் அப் டிஎன் (STARTUPTN) நிறுவனம், பிஎல்ஆர்சி நொய்டா மற்றும் ஸ்டார்ப் அப் இந்தியா ஆகியவற்றுடன் இணைந்து நடத்திய, தொழில் காப்பக மேலாண்மைப் பயிற்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு இ.ஆ.ப., அவர்கள் (03.12.2025) அன்று தொடங்கி வைத்தார்.

## கோவையில் 13 வீடுகளில் அடுத்தடுத்து கைவரிசை

# 3 வடமாநில கொள்ளையர்கள் சுட்டுப்பிடித்த போலீசார்...




கோவை அருகே வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் உள்ள 13 வீடுகளில் வீட்டின் பூட்டை உடைத்து 56 பவுன், 3 கிலோ வெள்ளி, ரூ.3 லட்சம் ரொக்கம் உள்ளிட்டவைகளை கொள்ளையடித்த வடமாநில கொள்ளையர் 3 பேரை போலீசார் துப்பாக்கியால் சுட்டுப்பிடித்தனர். கோவை கவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள வீட்டு வசதி வாரிய அடுக்குமாடி குடியிருப்பில் அரசு அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் வசிக்கின்றனர். இங்கு ஏ பிளாக்கில் உள்ள 3 வீடுகளிலும், சி 3 பிளாக்கில் 10 வீடுகளிலும் என திருட்டு சம்பவம் நடைபெற்றது.

இந்த வீடுகளில் திருட்டு நடந்த விவரம் அந்தந்த வீட்டின் உரிமையாளர்களுக்கு நேற்று முன்தினம் மாலை தெரியவந்தது. கவுண்டம்பாளையம் போலீசார் சென்று விசாரணை நடத்தினர். அப்போது நில எடுப்பு பிரிவு வருவாய் அலுவலர் வீட்டில் 30 பவுன் நகைகள் திருட்டு நடந்ததும், மற்ற வீடுகளையும் சேர்த்து மொத்தம் 56 பவுன் நகைகள், ரூ.3 லட்சம் பணம்,3 கிலோ வெள்ளிப்பொருட்கள் திருடப்பட்டதும், கொள்ளையர்கள் ஆட்டோவில் வந்து திருட்டில் ஈடுபட்டிருப்பதும் தெரியவந்தது.

மாநகர போலீஸ் கமிஷனர் சரவணசுந்தர் நேரில் சென்று விசாரணை நடத்தினார். 6 மாதங்களுக்கு முன்பு இங்குள்ள குடியிருப்பில் சி பிளாக்கில் ஒரு வீட்டில் திருட்டு நடைபெற்று இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

கொள்ளையர்களை பிடிக்க சரவணம்பட்டி, துடியலூர், கவுண்டம்பாளையம் போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் அடங்கிய 3 தனிப்படை போலீசார் தீவிர வேட்டை நடத்தினர்.




அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை ஆய்வு செய்தபோது, 2 பேர் பேக்குடன் செல்வது பதிவாகி இருந்தது. அதனை கைப்பற்றிய போலீசார் அந்த நபர்களின் விவரங்களை சேகரித்தனர். இதில் கொள்ளையர்கள் வடமாநிலத்தை சேர்ந்தவர்கள் என்பதை உறுதி செய்தனர். அவர்கள், கோவைப்புதூரை அடுத்த குளத்துப்பாளையம், திருநகர் பகுதியில் பதுங்கி இருப்பது தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து போலீசார் அங்கு சென்றனர். அங்கு ஒரு வீட்டில் பதுங்கியிருந்த கொள்ளையர்களை போலீசார் சுற்றி வளைத்து பிடிக்க முயன்றனர். அப்போது ஒருவர் அரிவாளால் போலீஸ்காரரர் பார்த்தீபனை வெட்டினார். இதில், அவருக்கு கையில் பலத்த காயம் ஏற்பட்டது.

தொடர்ந்து, கொள்ளையர்கள் அரிவாளை காட்டி மிரட்டி தப்பி ஓட முயன்றனர். உடனே போலீசார் 3 பேரையும் வலது காலில் சுட்டுபிடித்தனர். காயம் அடைந்த கொள்ளையர்களை மீட்டு கோவை அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். விசாரணையில் அவர்கள், உத்தரபிரதேசத்தை சேர்ந்த இர்பான் (48), கல்லூ ஆரிப் (60), ஆசிப் (45) என்பது தெரியவந்தது.

கோவை போலீஸ் கமிஷனர் சரவணன் சுந்தர் நிருபர்களிடம் கூறியதாவது: கொள்ளையர்கள் 3 பேரும் உத்தரபிரதேச மாநிலத்தை சேர்ந்தவர்கள். குனியமுத்தூர் பகுதியில் இவர்கள் ஊரை சேர்ந்த 12 பேர் ஒரே வீட்டில் தங்கி உள்ளனர். பாத்திர வியாபாரம் செய்யும் அவர்களிடம் இவர்கள் துணி வியாபாரம் செய்ய வந்திருப்பதாக தெரிவித்துள்ளனர். 56 பவுன் கொள்ளை போனதாக தகவல் வெளியானது.

ஆனால் 42 பவுன் நகை, 500 கிராம் வெள்ளி மட்டுமே கொள்ளை போய் உள்ளது. அதில் 32 கிராம் கவரிங், பணம் ரூ. 1.50 லட்சம். இவை அனைத்தும் மீட்கப்பட்டுள்ளது. மூன்று மணி நேரத்தில் கொள்ளை அடித்து சென்று உள்ளார்கள். இவர்களுடன் தங்கி இருந்த 12 பேரிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 5 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டு காலை 9 மணிக்கு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 3 பேரும் வந்த ஆட்டோவின் டிரைவர் பங்களிப்பு குறித்தும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

---






01.12.2025 அன்று ஆவடி காவல் ஆணையரகம் T7 டேங்க் பேக்டரி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் சமூக ரீதியாகயவும் பொருளாதார ரீதியாகவும் பின் தங்கிய குழந்தைகள் கல்வி, இலக்கியம் மற்றும் விளையாட்டு ஆகியவற்றில் தங்கள் திறமையை மேம்படுத்தி கொள்ள டேங்க் பேக்டரி காவல் நிலைய சிறார் மற்றும் சிறுமியர் மன்றத்தை ஆவடி காவல் ஆணையரகம் HCL Foundation உடன் இணைந்து நூலகம் மற்றும் விளையாட்டு உபகரணங்களுடன் கூடிய புதிய கட்டிடம் கட்டப்பட்டது. இக்கட்டிடத்தை ஆவடி காவல் ஆணையாளர் திரு.கி. சங்கர் இ.கா.ப அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் ஆவடி காவல் மாவட்ட துணை ஆணையர் திரு.பெரோஸ் கான் அப்துல்லா இ.கா.ப அவர்கள், Mr.Jikesh krishna VP HCL Technology, Mr.Isabella National hockey playar England, Tmt. v hope Foundation மற்றும் அப்பகுதி மக்கள் குழந்தைகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்

# ஆபத்தை விளைவிக்கும் மெட்ரோ ரெயில் நடைபாதைகள்

"இன்றைய சிரமம், நாளைய நன்மைக்காக" — இது சென்னை மெட்ரோவின் கோஷம். நகரத்தின் பல இடங்களில் போடப்பட்டுள்ள ப்ளூ கலர் தடுப்புச்சுவர்களில் அந்த வாசகம் பெரிய எழுத்தில் எழுதப்பட்டிருக்கும்.

ஆனால், "'இன்று மட்டும் சிரமம்' அல்ல, 'நாளையும் சிரமம்' தான் இருப்பது போல உள்ளது" என்று மக்கள் வேதனையுடன் சொல்கிறார்கள்.

நடைபாதைகள் நெருக்கமாகவும், சமமில்லாமல் குவியலாகவும், குப்பை மற்றும் களிமண் நிறைந்ததாகவும் உள்ளன. மிகக் குறுகிய இடங்களின் வழியாக மக்கள் திணறிப் போக வேண்டிய நிர்ப்பந்தம். சில நடைபாதைகள் 1.5 மீ. அகலத்துக்கு கூட அமையவில்லை. மாடுகளோ, தெருநாய்களோ திடீரென முன் வந்து பயமுறுத்துகின்றன. இரவு நேரங்களில் இது மிகவும் ஆபத்தாக மாறுகிறது.

திட்ட செலவு: ₹30 கோடி – நடைபாதைக்கு மேம்பாடே இல்லை

சென்னை மெட்ரோ ரெயில் லிமிடெட் (CMRL) Phase–II திட்டப்பகுதியில் 43 இடங்களில் நடைபாதை தடுப்பு அமைப்புக்கே சுமார் ₹30 கோடி செலவழிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. ஆனால், உண்மையில் நடைபாதைகளைப் பயன்படுத்தும் பொதுமக்களுக்கு எந்த மாற்றமும் தெரியவில்லை.

CMRL (சென்னை மெட்ரோ ரெயில்) Phase–II பணிக்காக ₹63,246 கோடி மதிப்பீடு அறிவிக்கப்பட்டாலும், நடைபாதைகளை சீரமைப்பது குறித்து எந்த சரியான நடவடிக்கையும் நடைபெறவில்லை. "வேலைகள் 2028க்கு முன் முடியும்" என்ற பதில் மட்டும் வழங்கப்படுகிறது.

CMRL விளக்கம்

சி.எம்.ஆர்.எல் இயக்குநர் (திட்டங்கள்) டி. ஆர்சுனன் பிரச்சினைகளை ஏற்றுக்கொள்கிறார்

CMRL Projects Director R. அருண்ராஜன் கூறுவது: "Phase–II முழுக்க நடைபாதைகள் 2028க்குள் முழுமையாகப் புதுப்பிக்கப்படும். சில வேலைகள் Phase–III உடன் இணைந்து திட்டமிடப்பட்டுள்ளன." "தடுப்புச்சுவர் அமைப்பு தினசரி நடைபெறும் மெட்ரோ பணிகளுக்கான பாதுகாப்பு முறையாகும். பொதுமக்கள் தற்காலிக சிரமம் அனுபவிக்க வேண்டி வருகிறது."

ஆனால், மக்கள் கேள்வி: "அந்த 'தற்காலிக சிரமம்' ஏன் ஆண்டாண்டுகாலம் நீளுகிறது?" சில இடங்களில் குடிநீர் குழாய்கள் நடைபாதைமேல் ஓடிக் கொண்டிருப்பது, சில இடங்களில் தற்காலிக கடைகள் குவிந்திருப்பது, மேலும் பக்கத்து சாலைகளில் வேலிபோட்டு "மெட்ரோ வேலைப் பகுதி" என காட்டி விட்டும் எந்தப் பணியும் நடக்காத நிலை தொடர்கிறது.




அதிக ஆபத்தான பகுதிகள்

- T நகர் –வெங்கடநாராயணா சாலை
- மந்தவெளி – VK ரோடு–முட்டு ரோடு இணைப்பு
- ஸ்டெர்லிங் ரோடு–கல்லூரி இணைப்பு ரோடு
- மைலாபூர் – குப்பம் பகுதி நடைபாதை

இந்த இடங்கள் அனைத்தும் இரவுகளில் முழு இருளில் மூழ்கி, பெண்கள் பயணிக்க முடியாத நிலையில் உள்ளன. மேலும் பல நடைபாதை குப்பை குவியலால் மூடப்பட்டுள்ளது. திருமங்கலம், கோடம்பாக்கம், அண்ணாசாலை, டி.நகர் பக்கப்பகுதிகள் – எங்கும் ஒரே நிலை.

நகர வளர்ச்சிக்கான பெருமைமிகு மெட்ரோ ரெயில் திட்டம் மக்களின் வாழ்க்கையை எளிதாக்க வேண்டிய ஒன்று.

ஆனால், மெட்ரோவிற்கு வந்தாலும் அல்லது மெட்ரோவிலிருந்து வெளியே வந்தாலும், அவர்களை எதிர்கொள்வது ஆபத்தான நடைபாதைகளே என்ற நிலை தொடர்கிறது.

"நாளையச் சிறந்த சென்னைக்கு" என்ன செய்ய வேண்டும் என்று நிபுணர் கருத்துகளை ஏற்று நடைபாதை உடனடியாக சரிசெய்யப்பட வேண்டும் என்பதே மக்களின் ஒரே கோரிக்கையாக உள்ளது.

CHIMPANZ LEARNING HUB

Learn

**Website Creation**

Step by Step WordPress
Beginner level Program

3 Days Online

# COURSE

With

Certificate

Discover new skills and achieve your goals Build Your Dream website – No coding required! Join our program and learn to create your own website easily and effectively.




STUDENT OFF Avilable

FOR EVERYONE: From Side-Hustlers & Bloggers to Small Businesses & Students. If you can use a computer, you can build your website in 3 days!

- Live Q&A Sessions
- Affordable Course Fees

**Contact Us:**

admin@chimpanzlearninghub.in

**LIMITED SEATS ! REGISTER TODAY**




# தஞ்சாவூர் குப்பை கிடங்கு முறைகேடு வழக்கு..!

## முன்னாள் ஆணையர் உள்பட 4 பேர் மீது வழக்கு பதிவு

## மேயர் சண்.ராமநாதன் உடந்தையா..?

தஞ்சாவூர் மாநகராட்சியின் முன்னாள் ஆணையர் சரவணக்குமார். இவர் தஞ்சாவூரில் பணியாற்றிய போது மாநகராட்சிக்கு சொந்தமான பல கோடி மதிப்புடைய இடத்தை தனி நபர்களிடம் இருந்து மீட்டார். துணிச்சலான இவரது செயல் அப்போது பலராலும் பாராட்டை பெற்றது.

மேலும் அவரது பணி காலத்தில் பல விமர்சனங்களும் எழுந்தன. மாநகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடங்கில் குப்பை தரம் பிரித்தலில் சரவணக்குமார் முறைகேடு செய்ததாகவும் புகார் எழுந்தது.

மேலும், மாநகராட்சி கடைகள் ஏலம் விட்டதில் விதிகள் மீறப்பட்டதாகவும் சர்ச்சை எழுந்தது. இந்நிலையில் அவர் இடம் மாற்றம் செய்யப்பட்டு மகேஸ்வரி என்பவர் ஆணையராக பொறுப்பேற்றார்.

மாநகராட்சியில் முறைகேடு நடந்திருப்பதாக எழுந்த புகாரின் அடிப்படையில் சென்னையில் இருந்து வந்த தணிக்கை குழுவினர் ஆய்வு செய்தனர்.

இந்நிலையில், தஞ்சாவூரைச் சேர்ந்த சமூக ஆர்வலர் போர்வாள் கோவிந்தராஜ் என்பவர் குப்பை தரம் பிரிப்பதில் முறைகேடு நடந்திருப்பதாகவும், லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸார் விசாரிக்க வேண்டும் என மதுரை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.




மேயர் சண்.ராமநாதன், முன்னாள் ஆணையர் சரவணக்குமார்

இது குறித்த வழக்கு நடந்து வந்த நிலையில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் விசாரணை மேற்கொண்டு வந்தனர். இந்நிலையில், முன்னாள் ஆணையர் சரவணக்குமார் உட்பட நான்கு பேர் மீது லஞ்ச ஒழுப்பு போலீஸார் வழக்கு பதிவு செய்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து சிலரிடம் பேசினோம், தஞ்சாவூர் ஜெபமாலைபுரத்தில் 28 ஏக்கர் பரப்பில் மாநகராட்சிக்கு சொந்தமான குப்பைக் கிடங்கு உள்ளன. இங்கு சேரும் குப்பைகளை தரம் பிரிக்க, கடந்த 2018ம் ஆண்டு பயோமைனிங் முறையில் 2.30 லட்சம் கனமீட்டர் அளவுக்கு குப்பையை தரம் பிரிக்க ஒப்பந்தம் வழங்கபட்டது.

இதற்காக ஒப்பந்தம் எடுத்த தனியார் நிறுவனம் 40,115 யூனிட் மின்சாரத்தை பயன்படுத்தி 73,253 கன மீட்டர் குப்பையை அகற்றி உள்ளது.

அதன் பின், சரவணக்குமார் பொறுப்பேற்ற பிறகு புதிய நிறுவனத்துக்கு 2022 ஆகஸ்டில், 1.56 லட்சம் கன மீட்டர் குப்பையை பிரிக்க ரூ.10.60 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டது.

ஆனால், புதிதாக ஒப்பந்தம் எடுத்த நபர் வெறும் 5,000 கனமீட்டர் குப்பையை மட்டுமே அகற்றி விட்டு, ரூ.10.60 கோடி பில் தொகை பெற்றுக் கொண்டுள்ளார். அதற்கு, 8,328 யூனிட் மின்சாரம் பயன்படுத்தியுள்ளனர். இதை வைத்து இதில் முறைகேடு நடந்திருப்பதாக பேசப்பட்டது.

இதனைதொடர்ந்து, இது தொடர்பாக போர்வாள் கோவிந்தராஜ், வழக்கு தொடர்ந்திருந்தார். இதையடுத்து, உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வழக்கு விசாரணை நடைபெற்றது. இந்நிலையில், கடந்த 20ம் தேதி லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸார், தஞ்சாவூர் மாநகராட்சி அலுவலகத்தில் குப்பை கிடங்கு மற்றும் ஸ்மார்ட் திட்ட பணிகள் குறித்த ஆவணங்களை ஆய்வு செய்து ஆணவங்களை எடுத்து சென்றனர்.

இதையடுத்து தஞ்சாவூர் மாநகராட்சியின் முன்னாள் ஆணையர் சரவணக்குமார், ஓய்வு பெற்ற செயற்பொறியாளர் ஜெகதீசன், பணியிட மாறுதல் செய்யப்பட்டுள்ள உதவி பொறியாளர் கார்த்திகேயன், ஒப்பந்ததாரர் மணிசேகர் ஆகிய நான்கு பேர் மீது தஞ்சாவூர் லஞ்ச ஒழிப்பு போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இது தொடர்பான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்பித்துள்ளனர். இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், மேயர் சண்.ராமநாதனுக்கும் இந்த முறைகேட்டில் தொடர்பிருக்கலாம் என்றும் இந்த வழக்கில் மேயர் சண்.ராமநாதன் பெயர் சேர்க்கப்படவேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

---

## பிறந்தநாள் வாழ்த்து..!

ஏழு பனிரெண்டில் எழுந்தேன்
எனக்குள் நானே விளைந்தேன்
பெற்றவளின் பாசவலியில் கற்றேன் அன்பை
பூலோக மண்ணில் தெரிந்தேன் ஆளுமையை

ஏழ்மையின் இருப்பிடமாய் எழுந்து வந்தேன்
எண்ணங்களின் ஏற்றங்களை விதைத்து வளர்ந்தேன்
அன்னையும் தந்தையும் வழிகாட்டிய வழித்தடம்
ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளித்தது கல்விக்கூடம்

எளிமையின் இல்லாள் இதயத்தினுள் வந்தாள்
எதையும் சாதிக்க துணையாய் இருந்தாள்
படிப்பின் பரிசாக அழைத்தது காவல்துறை
பணிகளில் உயர்ந்திட உதவியது குடும்பத்துறை

தலைமுறைகள் துளிர்க்க குழந்தைகள் மூன்று
தழைத்து வாழ்ந்திட இருப்பேன் துணைநின்று
கடந்தேன் காவலை ஓய்ந்தேன் வீட்டில்
கவலைகளை துறந்து வாழ்வேன் மகிழ்வில்

பிறந்தநாளில் நினைத்தேன் என்னுள் எழுதினேன்
பிறப்பின் பயனாக எந்நாளும் வாழ்வேன்



- சி.சுபாஷ் சந்திர போஸ்,
காவல்துணைக்கண்காணிப்பாளர் (ஓய்வு)



மும்முனைப் போட்டி

# 2026 சட்டமன்றத் தேர்தல்... யாருக்கு சாதகம்..?

2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, தவெக என கிட்டத்தட்ட மும்முனைப் போட்டி உறுதியாகிவிட்டது. இதில் நாதகவும் தவெகவும் பிரிக்கும் வாக்குகள் யாருக்குச் சாதகமாகும் என்பதே இப்போதைய கேள்வி.

தமிழகத்தில் ஒவ்வொரு தேர்தலுக்கும் கூட்டணி கணக்குகள் மாறினாலும், மூன்றாவது அல்லது நான்காவது அணிகள் எப்போதும், பிரதானமான திமுக, அதிமுக கூட்டணியின் வெற்றி தோல்விகளுக்கு காரணமாகி இருக்கின்றன. 2016 தேர்தலில் அதிமுக 40.88% வாக்குகளுடன் 136 இடங்களில் வென்று ஆட்சியை பிடித்தது. திமுக கூட்டணி 39.85% வாக்குகளுடன் 98 தொகுதிகளில் வென்று ஆட்சியை இழந்தது. இரண்டு அணிகளுக்கு இடையிலான வாக்கு வித்தியாசம் 1 சதவீதம் தான். அதேசமயம், மக்கள் நலக் கூட்டணி பெற்ற வாக்குகள் 6.1 சதவீதம். தனித்து போட்டியிட்ட பாமக 5.36 சதவீதம், பாஜக 2.86 சதவீதம், நாதக 1.07 சதவீதம் என வாக்குகளை பெற்றன. இதுதான் கூட்டணி கணக்கு. இதில் ஒரு சில கட்சிகள் திமுக பக்கம் போயிருந்தால் ஆட்சியே மாறியிருக்கலாம்.

2021 தேர்தலில் திமுக கூட்டணி 45.38 சதவீத வாக்குகளுடன் 159 தொகுதிகளில் வென்று ஆட்சியை பிடித்தது. அதிமுக கூட்டணி 39.71 சதவீத வாக்குகளுடன் 75 தொகுதிகளில் வென்று ஆட்சியை இழந்தது. இரு கூட்டணி களுக்கு இடையிலான வித்தியாசம் 6 சதவீதம் தான். அந்தத் தேர்தலில் 3வது இடம்பிடித்த நாதக பெற்ற வாக்குகள் 6.58 சதவீதம். அதே போல், அமமுக தேமுதிக 2.85 சதவீதமும் மநீம 2.73 சதவீதமும் வாக்குகளை பெற்றன.

வரும் 2026 தேர்தலில் திமுக அணி அப் படியே தொடர்கிறது. அதிமுக பாஜக கூட்டணியில் இன்னும் சில கட்சிகள் இணையலாம். வழக்கம் போல நாதக தனித்து போட்டியிடுகிறது. தவெகவுக்கும் தனித்து போட்டியிடுவதை தவிர வேறு வழியில்லை. ஒருவேளை, நாதக தவெக கூட்டணி அமையலாம். தற்போதைய சூழலில் 4 முனைப் போட்டி நிச்சயமாகி உள்ளது.

இதில் 2024 தேர்தலின்படி நிரூபிக்கப்பட்ட வாக்கு சதவீதப்படி திமுக அணிக்கு 46.97 சதவீத வாக்குகள் உள்ளன. அதிமுக அணியின் 23.05 சதவீதம், பாஜக அணியின் 18.28 சதவீத வாக்குகளைக் கூட்டினால் 41.33 சதவீதம் வரும். 2024ல் நாதக தனித்து 8.20 சதவீத வாக்குகளைப் பெற்றது. இதில் திமுக ஆட்சிக்கு

எதிரான மனநிலை கொண்ட வாக்குகளை அறுவடை செய்து எளிதாக வெற்றிபெறலாம் என்பது அதிமுக — பாஜகவின் கணக்கு. ஆனால், புதிதாக களத்துக்கு வரும் தவெக யாருடைய வாக்குகளைப் பிரிக்கப்போகிறது எனத் தெரியவில்லை.

விஜய் கடுமையாக திமுகவை எதிர்க்கிறார். எனவே, திமுகவுக்கு எதிரான வாக்குகள் தவெகவுக்குப் போகலாம் இது அதிமுகவுக்கு மைனஸ். அதேசமயம், விஜய், பாஜகவையும் கடுமையாக எதிர்க்கிறார். இதனால் பாஜகவுக்கு எதிரான வாக்குகள் விஜய்க்கு வரலாம். இது திமுகவுக்கு மைனஸ். மேலும், திமுக, பாஜகவை பிடிக்காத சிறுபான்மையினர், அரசு ஊழியர்கள், பொதுமக்கள் வாக்குகள் தவெக நாதகவுக்கு போகும்.

இது திமுக, அதிமுக அணிகளுக்கு மைனஸ். ஒருவேளை, நாதக தவெக கூட்டணி அமைந்தால் அது திமுக, அதிமுக அணிகளுக்கு மேலும் சவாலாகும். 2006ல் விஜயகாந்த் 3வது அணியாக களத்தில் நின்றார். அது அப்போதைய ஆளும் கட்சியான அதிமுகவின் ஆட்சி பறிபோக காரணமானது. 2011ல் அதே தேமுதிகவை கூட்டணிக்குள் இழுத்து திமுகவை ஆட்சியிலிருந்து அகற்றினார் ஜெயலலிதா. அதேசமயம், 2016ல் அமைக்கப்பட்ட மக்கள் நலக்கூட்டணி எதிர்க்கட்சியான திமுகவுக்குப் போகவேண்டிய வாக்குகளை அறுவடை செய்து, மீண்டும் அதிமுக ஆட்சியமைய காரணமானது. 2021ல் நாதக பிரித்த வாக்குகள் அதிமுக ஆட்சியை இழக்க வழியமைத்தது.

எப்படிப்பார்த்தாலும் தற்போதைய 4 முனைப் போட்டி, திமுகவுக்கும், அதிமுகவுக்கும் கத்திமேல் நடக்கும் பாதைதான். தேர்தலுக்கு இன்னும் 6 மாதங்களே இருப்பதால் அதற்குள்ளாக காட்சிகள் மாறுகிறதா எனப் பார்ப்போம்.

# பூக்கடை பகுதியில் கத்தியைக் காட்டி மிரட்டி, பர்ஸை பறித்துச் சென்ற கணவன் மனைவி உட்பட 3 நபர்கள் கைது. பர்ஸ் மீட்பு.







சென்னை, பூக்கடை, இராஜீவ்காந்தி அரசு மருத்துவமனை அருகில் பிளாட்பாரத்தில் தங்கி, பட்டுக்கோட்டையை சேர்ந்த நிர்மல், வ/27, த/பெ.தங்கவேல் என்பவர் கூலி வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 30.11.2025 அன்று இரவு, இராஜீவ்காந்தி அரசு மருத்துவமனை அருகில் பிளாட்பாரத்தில் தூங்கிக் கொண்டிருந்தபோது, அங்கு வந்த 1 பெண் உட்பட 3 நபர்கள், நிர்மலிடம் தகாத வார்த்தைகள் பேசி, பணம் கேட்டுள்ளனர். நிர்மல் தன்னிடம் பணம் இல்லை என்று கூறவே, கத்தியைக் காட்டி மிரட்டி, நிர்மல் வைத்திருந்த ஆதார் கார்டு அடங்கிய பர்ஸை பறித்துக் கொண்டு, மூவரும் தப்பிச் சென்றனர். இது குறித்து நிர்மல், C–1 பூக்கடை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். C–1 பூக்கடை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.பரமேஸ்வரன், வ/26, செம்மஞ்சேரி, சென்னை, 2.ஜெகன், வ/26, வால்டாக்ஸ் ரோடு, பிளாட்பாரம், சென்னை மற்றும் பரமேஸ்வரனின் மனைவி 3.பிரியா, பெ/வ–23, வியாசர்பாடி, சென்னை ஆகிய 3 நபர்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து புகார்தாரரின் ஆதார் அடங்கிய பர்ஸ் மீட்கப்பட்டு, குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி பரமேஸ்வரன் மீது ஏற்கனவே வழிப்பறி, திருட்டு உட்பட 16 குற்ற வழக்குகளும், இவர் செம்மஞ்சேரி காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவரது மனைவி பிரியா மீது 1 கொலை உட்பட 3 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர் (01.12.2025) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

# செம்மொழி பூங்கா சிறப்பாக உருவானதற்கு கோவை மாநகராட்சி கமிஷனருக்கு முதல்வர் பாராட்டு



காந்திபுரத்தில் செம்மொழி பூங்கா உருவாக, பாடுபட்ட மாநகராட்சி கமிஷனர் சிவகுரு பிரபாகரனை, முதல்வர் ஸ்டாலின் நேரில் அழைத்து பாராட்டினார்.

மத்திய சிறைக்கு சொந்தமான இடமாக இருந்ததால், நிலத்தை வகை மாற்றம் செய்வதற்கு காகித வடிவில் அரசு துறைகளுக்கு இடையே, அனுமதி பெறுவதற்கு மெனக்கெட வேண்டியிருந்தது.

திறப்பு விழா தேதி முடிவு செய்யப்பட்டதும், கடந்த 12 நாட்கள் இரவு — பகலாக மாநகராட்சி குழுவினர் பணிபுரிந்தனர். இத்தகவலை, முதல்வர் ஸ்டாலின் கவனத்துக்கு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் நேரு கொண்டு சென்றார்.

உடனடியாக முதல்வர் ஸ்டாலின், தான் தங்கியிருந்த ஹோட்டலுக்கு, மாநகராட்சி கமிஷனர் சிவகுரு பிரபாகரனை வரவழைத்து பேசியுள்ளார். அப்போது, செம்மொழி பூங்கா உருவான விதம் குறித்து, முதல்வரிடம் கமிஷனர் விளக்கினார். அவரது இரு கரங்களையும் பிடித்து குலுக்கி, தனது தந்தையின் கனவை நனவாக்குவதற்கு, அக்கறை எடுத்து பணியாற்றியிருப்பதாக, நெகிழ்ச்சியுடன் வாழ்த்து தெரிவித்த முதல்வர், பொன்னாடை அணிவித்து, மரியாதை செய்தார்.




தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் உட்கோட்டப்பகுதியில் நடந்த கொலை வழக்கின் எதிரிகளை சம்பவம் நடைபெற்ற இரண்டு மணிநேரத்திற்குள் கைது செய்த கும்பகோணம் கிழக்கு காவல்நிலைய காவல் ஆய்வாளர் திரு.சிவ செந்தில்குமார், சுவாமி மலை காவல் நிலைய காவல் ஆய்வாளர் திரு.ஜெயமோகன், தனிபிரிவு தலைமைக் காவலர் திரு. உதய்சிங் மற்றும் தலைமைக் காவலர் ஹரிகிருஷ்ணன் ஆகியோரின் துரித நடவடிக்கையை பாராட்டி தஞ்சாவூர் சரக காவல்துறை துணைத் தலைவர் திரு.ஜியாவுல் ஹக் இ.கா.ப அவர்கள் பாராட்டு சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார்கள்.

Owned, Published And Printed By **R.SIVAKUMAR** Printed At **CHENNAI OFFSET PRINTERS**, 19/1, 21/2, Kitabathkhan Bhandur Street, Ellis Road, Chennai - 600002. Published From No.14/88, 3rd Main Road, Venkateswara Nagar, Velachery, Chennai - 600042 Editor: **R.SIVAKUMAR**

# Z System Intelligent Controls Private Limited

system

Intelligence in Automation

We are prominent Industrial automation solution provider having strong knowledge and expertise in handling automation products like PLC, HMI/SCADA, VFD, PID controllers, Field transmitter, Switches, Sensors etc.

We areconversant in handling IOT, VR & AR applications

We offer complete sales, Engineering & Application development and Commissioning support services across India.

## Our Principles & Products

SIEMENS



PLC,HMI,Scada,VFD,IOT Solutions, RFID

azbil



Temperature Controller, Recorders, Switch, Sensors

TURCK



Sensors, Connectivity. Interface technology Analysers

AR, VR, ER Developement




## Our Service



Power



Water & Waste water



Metro



SPM



Cement



Metal



Smart World

## Our Clients

## Contact Address

Plot No.36
27th Street
Thillai Ganga Nagar
Nanganallur
Chennai-600061
Website : www.zsystem.in

Plot No.22,23, Amal Nagar, Tambaram
Chennai-600045.Tamilnadu, India.
Phone : 098404 53136

/zsystem.in
/zsystem_in
/z-system-intelligent-controls-pvt-ltd


GEESYS
பாதுகாப்பான மின்சாரம்.
நிலையான ஓட்டம்.
SOLAR AC DISTRIBUTION BOX
GEESYS
DANGER
240V AC
VOLTS
Geesys AC DC Box
Best Sale in Market
Solar PV Plants
Industrial Power Panels
Hybrid Systems
Follow us
Call Us
9962012354
Mail Us
Info@geesysindia.com
Learn more
www.geesysindia.com